# வானவில்

VAANAVIL
ISSUE – 27 MARCH 2013

இதழ் - 27 பங்குனி 2013

# தமிழக மாணவர்கள் போராட்டத்தின்

# குறி இந்திய அரசே!

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அண்மையில் உருவாகியுள்ள மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் ஒரு புதிய பரிமாணமாக அரசியல் நோக்கர்களால் நோக்கப்படுகிறது. இந்தப் போராட்டத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏறத்தாழ அனைத்து தமிழகக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. அதுமாத்திரமல்லாமல் இந்தப் போராட்டங்கள் காரணமாக இந்திய மத்திய அரசாங்கமும் பெரும் இக்கட்டில் சிக்கியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக திராவிட இயக்கங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை செலுத்தி வந்துள்ளன என்பது வரலாறு. ஆரம்ப காலத்தில் அந்த அக்கறை சகோதர இன உணர்வு அடிப்படையில் இருந்ததும் உண்மைதான். ஆனால் எப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு ஏற்பட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற போட்டி அணி உருவானதோ, அன்று தொடக்கம் இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது, அந்த இரு அணிகளினதும் அரசியல் சதுரங்கப் போட்டியாகவும், இலங்கைத் தமிழர்கள் சதுரங்கக் காய்களாகவும் மாற்றப்பட்டுவிட்டது. பின்னர் அங்கு மேலும் பல பிளவுகள் திராவிட இயக்க அணியில் ஏற்பட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினை அங்குள்ள எல்லாக் குழுக்களினதும் வாக்கு வேட்டைக்கான முதலீடாகவும் மாறிவிட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து திராவிட இயக்கங்கள் நடாத்தும் அலங்கார திருவிழாக்களால் மருண்டுபோன தேசியக் கட்சிகளான காங்கிரஸ் கட்சி, இடதுசாரிக் கட்சிகள், பாரதீய ஜனதாக் கட்சி என்பனவும்கூட இப்பொழுது இந்த மலிவான விளையாட்டில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

இடையில் புலிகள் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததைத் தொடர்ந்து, மக்கள் எதிர்ப்புக்கு அஞ்சி சற்றுப் பின்வாங்கியிருந்த இந்த தமிழினப் பிழைப்புவாத சக்திகள், மீண்டும் தமிழக அரசியல் அரங்கின் மையப் பகுதிக்கு வந்து தமது கும்மாளத்தைத் தொடங்கியுள்ளன.




இந்தச் சூழ்நிலையில், இந்த தமிழக அரசியல் கட்சிகளின் நேரடித் தொடர்பு இல்லாத ஒரு தோற்றப்பாட்டுடன் தற்போதைய தமிழக மாணவர் போராட்டங்கள் தலையெடுத்துள்ளன. அந்தப் போராட்டத்தின் விசாலமும், அது முன்வைத்திருக்கும் கோரிக்கைகளும் சற்றுப் பாரதூரமான சிந்தனைக்கு உரியவையாகும். அது தமிழக அரசியல் கட்சிகளின் வழமையான பாணியிலிருந்து சற்று வித்தியாசமான புதிய பரிமாணத்தில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. அதாவது இந்த மாணவர் போராட்டங்கள் சுயாதீனமானவை என்றோ, சுதந்திரமானவை என்றோ ஒதுக்கிவிட முடியாத தன்மையைக் கொண்டுள்ளன.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# மாநில அரசின் வெளியுறவுக்கொள்கையின் பின்னணி

“இலங்கையை, இந்தியா, நட்பு நாடாக கருதக் கூடாது. இலங்கைக்கு எதிராக, பொருளாதார தடை விதிக்க வேண்டும். தனி ஈழத்துக்காக, பொது வாக்கெடுப்பு நடாத்தும்படி, ஐக்கியநாடுகள் சபையை இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்” என 28.03.2013 இல் தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக தமிழ்நாடு மாநில அரசாங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவது இது முதற்தடவையல்ல. இதற்கு முன்னர் 2002 – 2006 ஆண்டு காலப்பகுதியில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் புலிகளைப்பற்றி மிகவும் காட்டசாட்டமாக மேடைகளில் பேசித்திரிந்தார். அப்போது “படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாரத பிரதமர் அமரர் ராஜீவ்காந்தியின் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் இலங்கை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என தமிழகசட்டசபை தீர்மானமொன்று நிறைவேற்றியது. அதன் பின்னர் 2011 ஆண்டில், ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையை இரத்து செய்யக்கோரி தமிழக சட்டசபையில் முதல் அமைச்சர் ஜெயலலிதா தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றினார்.

ஜெயலலிதா தலைமையிலான அரசினால் கொண்டுவரப்பட்ட மேற்குறித்த தீர்மானங்கள் அனைத்துமே அந்தந்த காலத்து அரசியலை பின்புலமாக கொண்டவை. ராஜீவ்காந்தி கொலையைத் தொடர்ந்து, புலிகளால் தனது உயிருக்கும் ஆபத்து விளையலாம் எனும் காலகட்டத்தில் விசேட கொமாண்டோ படைகளின் பாதுகாப்பில் புலிகளை எதிர்த்தும், புலிகளின் அழிவிற்கு பின்னர் கருணாநிதி ரெசோ மகாநாட்டை கூட்டியதால், தானும் இலங்கை தமிழர் நலன்களுக்காக போராடுபவர் போன்றும் தோற்றம் காட்டுகிறார். அடுத்த வருடம் (2014) தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்ற தேர்தலை மனதில் கொண்டே, தற்போதைய இலங்கை அரசு தமிழக கட்சிகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் 28 மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாடு, அதன் சட்டசபையில் இலங்கை போன்ற இன்னொரு நாட்டிற்கெதிராக நிறைவேற்றும் தீர்மானத்தால் எந்தவித பிரயோசனம் இல்லையென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. எனினும் இவ்வாறு இன்னொரு நாட்டிற்கெதிராக தீர்மானங்களை நிறைவேற்றுவதின் ஊடாக, மாநில சுயாட்சி அதிகாரங்களை ஜெயலலிதா அரசு துஸ்பிரயோகம் செய்கின்றதென இந்திய மத்திய அரசிடமிருந்து இதுவரையில் குரல் எதுவும் வரவில்லை. இதனால் இந்திய மத்திய அரசும் மாநில அரசின் வரம்பு மீறிய இத்தீர்மானத்தின் பின்னணியில் உள்ளது அல்லது இதனை வரவேற்கின்றது என்ற ஐயப்பாடு எழுகின்றது.

1967 ஆண்டு வரை தமிழ்நாடு மாநில அரசை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த இந்திய காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதற்கு, திராவிடர் கழகம் தனித்தமிழ்நாடு என்ற கோசத்தை முன்வைத்திருந்தனர். பின்னர் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்த சி.என்.அண்ணாதுரை திராவிட முன்னேற்ற கழகத்தை ஆரம்பித்தவுடன் தனித்தமிழ்நாடு என்ற கோசத்தை காற்றில் பறக்கவிட்டார். இவ்வாறே இன்று இலங்கைத் தமிழர்களுக்கு தனிஈழம் வேண்டும் என்று கூறும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் அதனை காற்றில் பறக்கவிட்டு நாளை இன்னொன்றை சொன்னால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுக்கொண்டிருக்கும் 2009 ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தக்காட்சிகள், கருணாநிதி கூட்டிய ரெசோ மகாநாடு, ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானங்களின் எதிரொலிகள், தமிழ்நாட்டில் இலங்கை சிங்களவர்களுக்கு எதிராக எழுந்துள்ள தமிழ் இனவாதம், இந்திய மத்திய கூட்டு அரசிலிருந்து திராவிட முன்னேற்ற கழகம் வெளியேறியது, தமிழ்நாடு கல்லூரி மாணவர்களின் போராட்டம் என கடந்த ஒரிரு வருட காலத்தில் அடுத்தடுத்தாக வரும் செய்திகள் எம்முள் பல கேள்விகளை எழுப்புகின்றன. குறிப்பாக 2009 ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், இலங்கை அமைதிப் பெருமூச்சு விடுவதை தடுக்கும் நோக்கில், இந்துசமுத்திர பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளிடையே ஓர் இணக்கப்பாடு தோன்றியிருப்பதாகவே தெரிகின்றது.

இலங்கை இந்துசமுத்திர பிராந்தியத்தில் ஒரு சிறிய தீவு. 1948 ஆண்டு பிரிட்டிஷிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் (முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திடம் அதிகாரம் கையளிக்கப்பட்ட பின்னர்) உள்நாட்டு சமூக, அரசியல் பொருளாதார நிலவரங்களில் இன்னமும் ஒரு நிலையான ஸ்திரத்தன்மை தோன்றவில்லை. உலக வங்கியிடமும் அந்நிய நாடுகளின் கடனுதவியிலும் தங்கியிருக்கும் இலங்கைக்கு, தன்னிறைவு கொண்ட நாடாக உருவாக வேண்டும் என்ற இலட்சிய வேட்கையும் உள்ளது. ஆனால் உள்நாட்டில் நிலவும் இனமுரண்பாடுகளுக்கு சரியான தீர்வொன்றினை காணமுடியாமல் திணறி வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில், இலங்கைக்கு அந்நிய சக்திகள் அடிமேல் அடியடித்தால், இலங்கை மக்கள் அனைவரும் கிளர்ந்தெழுவது தவிர்க்க முடியாதது. *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், ஜனநாயகத்தையும் விசாலப்படுத்தும்!

## - அமைச்சர் டியூ குணசேகர பேட்டி



அமைச்சர் டியூ குணசேகர

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஸ்ட அமைச்சருமான டியூ குணசேகர, Daily FT என்ற ஆங்கில ஊடகத்தின் பெண் ஊடகவியலாளர் சமித்தா குறுாப்பு (Chamitha Kuruppu) அவர்களுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியின் முக்கியமான சில பகுதிகளைக் கீழே தந்துள்ளோம் – – **வானவில் ஆசிரிய குழு**

**கேள்வி:** 13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்காக புதிய கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகச் செய்தி வந்திருக்கிறது. இது என்ன கூட்டணி? இதன் அங்கத்தவர்கள் யார்?

**பதில்:** 13ஆவது திருத்தத்தை நீக்கக்கோரி சில அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் இயக்கம் ஒன்று நடாத்தப்படுகிறது. 13ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் எல்லாக் கட்சிகளும், அதைத் தொடர்ந்து ஆதரிப்பவர்களும் எம்முடன் கலந்துரையாடியிருக்கிறார்கள்.

13ஆவது திருத்தத்தை நீக்கக் கோரும் இயக்கத்தை வெறுமனே பார்த்துக் கொண்டிராது நிச்சயமாக அதில் தயைிட்டு அதைத் தடுப்பது என நாம் இணங்கியுள்ளோம். இந்தக் கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதில் 8 கட்சிகள் பங்குபற்றின. அவையாவன: இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஆர்.தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, திஸ்ஸ விதாரண தலைமையிலான லங்கா சம சமாஜக் கட்சி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் என்பனவாகும். மேலதிகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் இருக்கின்றனர். ராஜித சேனரத்தின, அதாவுட செனிவிரத்ன, டிலான் பெரேரா மற்றும் றெஜினால்ட் கூரே ஆகிய அமைச்சர்களும் இந்தக் கலந்துரையாடலின் போது பிரசன்னமாகி இருந்தனர்.

13ஆவது திருத்தம் முழுமையான ஒன்று என நாம் கருதவில்லை. குறிப்பாக தற்போதுள்ள பட்டியலில் உள்ள விடயங்கள் குழப்பங்களுக்கு இட்டுச் செல்லக்கூடியது. ஆனால் மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைக்காமல் இதை நீக்குவதை அனுமதிக்க முடியாது.

அந்தக் கூட்டத்தில் நாம் இரண்டு தீர்மானங்களை மேற்கொண்டோம். அரசியலமைப்பில் இருந்து 13ஆவது திருத்தத்தை நீக்குவதைத் தடுப்பது. அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் கோருவது.

எமது கருத்துக்களைத் தெரிவித்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளோம். அரசாங்கத்திலுள்ள சில உறுப்பினர்கள் 13ஆவது திருத்தத்தை நீக்கக்கோரி இயக்கம் ஒன்றை நடாத்துவதாக ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளோம்.

**கேள்வி:** 13ஆவது திருத்தத்தை நீக்கும் முயற்சிக்கு எதிராக 30 வரையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு முன்னணியாகச் செயற்படுவதாகக் கூறினீர்கள். இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்தப் பலம் போதுமென்று நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** பெரும் தொகையினரான அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்குச் சாதகமாக இருக்கின்ற போதிலும், அவர்கள் அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை. மாகாணசபைகளில் இருந்து வந்த பெரும்பாலான இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மை ஆதரிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதை ஆதரிக்கின்றனர். அவர்கள் முன்னுக்கு வரவில்லை. ஆனால் நாம் முயற்சி எடுத்துள்ளோம்.

13ஆவது திருத்தத்தை ஆதரித்த ஆரம்பகால நாடாளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவன். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் 13ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த முதலாவது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நான்தான். அதற்காக 10 பயமுறுத்தல்களும், என்னைக் கொல்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில நடவடிக்கைகளைச் செய்வது அவசியம் என நான் நினைத்தேன். 13ஆவது திருத்தம் ஜனநாயகத்தை விரிவுபடுத்துவதற்கான ஒரு கருவி என்பது எனது பலமான அபிப்பிராயமாகும்.

**கேள்வி:** காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** இவைகள் மிகைப்படுத்திக் கூறப்படுபவை என நான் கருதுகிறேன். இந்தப் பிரச்சினைகள் விடயங்களைச் மேற்கொள்வதற்குத் தடையானவை அல்ல. காணி அதிகாரத்தை எடுத்துக் கொண்டோமானால், அது மாகாணசபைப் பட்டியலிலும், அதேநேரத்தில் மத்திய அரசாங்கப் பட்டியலிலும் இருக்கின்றது. ஆனால் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சின்படி, நாம் ஒரு காணிக் கொள்கையையும், அதற்கான ஆணைக்குழு ஒன்றையும் கொண்டிருக்க வேண்டும். அரசியல்வாதிகள் இதைப் பயன்படுத்த நாம் அனுமதிக்கக்கூடாது. எமது நாட்டில் காணி என்னும்போது, அவை அரச காணிகளேயொழிய, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான காணிகள் அல்ல. கடந்த 30 வருடங்களாக நாட்டில் யுத்தம் நடைபெற்று வந்ததால், அந்தப் பிரதேசங்களில் காணிப் பங்கீடுகள் நடைபெறவில்லை. வடக்கு கிழக்கில் மட்டும் அரச காணிகள் பங்கிடப்படாத நிலை தொடர்கிறது. மற்றைய மாகாணங்களில் காணிகள் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கட்டத்தில் கொழும்பிலுள்ள மக்கள் வந்து தமது காணிகளை அபகரித்துவிடுவார்கள் என்ற பயம் தமிழ் மக்களிடம் இருக்கிறது. எம்மிடம் பலமான ஒரு காணிக் கொள்கை இருக்குமானால், அந்தக் கொள்கையை அமுல்படுத்த முடியும். அதன் பின்னர் சரியான வழியில் காணிகளைப் பங்கீடு செய்ய முடியும். இந்த விடயத்தை நீங்கள் அரசியல்வாதிகளுடன் சம்பந்தப்படுத்தினீர்களானால், பின்னர் அங்கு குழப்பம்தான் ஏற்படும். ஒரு பாரபட்சமற்ற அமைப்பைக் கொண்டிருப்பதே இதற்குச் சிறந்ததாகும். ஒரு கொள்கை உருவாக்கப்பட்டுவிட்டால், ஆணைக்குழு தன் கடமைகளை முன்னெடுக்க முடியும்.

பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரையில், எனது தனிப்பட்ட அபிப்பிராயம் உடனடியாக அதை வழங்கக்கூடாது என்பதாகும். வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் எனக்கு எந்தப் பயமும் இல்லை. ஆனால் தெற்கில் முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமாக இருந்தால், அவர்கள் அந்த அதிகாரங்களைத் துஸ்பிரயோகம் செய்வதுடன், தவறாகவும் பயன்படுத்துவார்கள். தற்போதைய அரசியல் கலாச்சாரத்தில் மாற்றங்கள் ஏற்படும்வரை, பொலிஸ் அதிகாரங்களை வழங்காமல் இருப்பதே சிறந்ததாகும்.

**கேள்வி:** 13ஆவது திருத்தத்தை நீக்கினால், அது பயங்கரவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் வரவழைப்பதாக இருக்கும் என ஏன் கூறுகிறீர்கள்?

**பதில்:** 1987இல் இலங்கை - இந்திய அரசாங்கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. மக்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இது நடந்தது. இப்பொழுது உண்மையில் இந்த 13ஆவது திருத்தத்தால் யார் பயன் பெற்றுள்ளனர்? இன்றுவரை வடக்கில் ஒரு மாகாண சபை கிடையாது. மற்றைய ஏழு மாகாண சபைகளிலும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் 13ஆவது திருத்தத்தின் நன்மைகளைப் பெறுகின்றனர். இந்த 13ஆவது திருத்தம் உண்மையில் சிறுபான்மைத் தேசிய இனங்களான தமிழ் - முஸ்லீம் மக்களுக்காகவே கொண்டு வரப்பட்டது. அவர்கள் ஒருபோதும் இதன் நன்மைகளைப் பெறவில்லை. இதனால்தான் இந்த மக்களை நாம் இன்னொரு பேரழிக்குத் தள்ளுகிறோம் என நான் கூறுகிறேன். 13ஆவது திருத்தத்தில் நீக்கப்பட வேண்டிய முரண்பாடுகளும், விடயங்களும் இருக்கின்றன என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இதை மாற்றுவதானால், இதற்கு மாற்றீடான ஒன்றை நாம் கொண்டிருக்க வேண்டும்.

13ஆவது திருத்தம் என்பது இந்தியா திணித்த ஒன்று எனச் சொல்கிறார்கள். எப்பொழுது இந்த நாட்டைவிட்டு 700,000 மக்கள் வெளியேறினார்களோ, எப்பொழுது அவர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றார்களோ, அப்பொழுதே இது ஒரு இந்திய விடயமாகிவிட்டது. இந்திய அரசாங்கம் தலையிட்டதற்கு அதுதான் காரணம். பாக்கு நீரிணைக்கு அப்பால் ஐந்திலிருந்து ஆறு கோடி வரையிலான தமிழ் மக்கள் இருக்கிறார்கள். சில வன்செயல்கள் வெடிக்கும்போது, தமிழ் நாட்டில் அதன் தாக்கம் ஏற்படுவது இயல்பானது. அவர்கள் ஒரே இனம். கலாச்சாரம். மதம் என்பவற்றைக் கொண்டிருப்பதால். அது இயல்பானது. நாம் ஏற்கிறோமோ இல்லையோ இது ஒரு சரித்திர ரீதியான உண்மையாகும்.

1983இற்குப் பின்னர் நாட்டிலிருந்து வெளியேறிய 700.000 பேரில், ஏறக்குறைய 300.000 பேர் தமிழ் நாட்டிற்குச் சென்றுள்ளனர். இது இந்திய மத்திய அரசாங்கத்துக்கு ஒரு பிரச்சினையாகும். அதன் காரணமாக இயல்பாகவே இந்தியா தலையிட்டு பேச்சுவார்த்தை இடம் பெற்றது. எது எப்படியிருந்த போதிலும் சில தீர்வுகள் முன்

வைக்கப்பட்டது. அதில் சில பலவீனங்கள் உள்ளன. இந்தத் தீர்வை நீக்குவதற்கு கடந்த 25 வருடங்களாக முயற்சிகள் செய்யப்பட்டாலும். வடக்கு கிழக்கிலிருந்து அதை ஒருபோதும் நீக்க முடியவில்லை. இப்பொழுது செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற பேச்சுகளுக்கடையில் இது வெளிவந்துள்ளது. முஸ்லீம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவர் கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராகி உள்ளார். வடக்கு மாகாணசபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடைபெறவுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதில் வெற்றிபெறக்கூடும். விரும்பியோ விரும்பாமலோ இதற்கு நாம் உதவி செய்ய முடியாது. ஏனைய கட்சிகள் அங்கு சென்று, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்களை வென்றெடுக்க வேண்டும். அப்படியான சமயத்தில் 13ஆவது திருத்தத்தை நீக்கக் கோரும் இயக்கத்துக்கான அச்சுறுத்தல் உண்டு. அதை நாம் அனுமதிக்கக்கூடாது. ஏற்கெனவே மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு வரலாறு வழங்கியுள்ள சந்தர்ப்பம் மீண்டும் வரப்போவதில்லை. எப்படி நாம் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட முடியும்? அப்படி விடுவோமானால், தீவிரவாதிகளின் கை ஓங்கிவிடும்.

**கேள்வி:** ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் மூலம் என்ன விடயத்தை எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** இந்தக் கடிதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உள்ளது. 13ஆவது திருத்தத்தை நீக்கும்படி கோரி நாட்டில் ஒரு இயக்கம் நடாத்தப்படுகிறது என்பதை இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டுகின்றது. நாம் இந்தக் கடிதத்தில் அவ்வாறான ஓர் இயக்கத்தை எதிர்ப்பதைத் தெரிவித்துள்ளதுடன், அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டுள்ளோம். 13ஆவது திருத்தம் தமிழ் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுடன், ஜனநாயகத்தையும் விரிவுபடுத்துகின்றது. இந்த நன்மைகளை வடக்கு கிழக்கு மக்கள் ஒருபோதும் அனுபவித்ததில்லை. ஜனாதிபதி இதை நீக்குவதற்கு அனுமதித்தாரானால், முற்றுமுழுதாக புதிய சூழ்நிலை உருவாவதுடன், நாட்டில் சமாதானமும் இல்லாமல் போய்விடும்.

**கேள்வி:** ஜனாதிபதியிடமிருந்து இதற்கு என்ன பிரதிபலிப்பை எதிர்பார்க்கின்றீர்கள்?

**பதில்:** இது சம்பந்தமாக ஜனாதிபதி எதையும் செய்துவிட முடியாது. குறைந்த பட்சம் யதார்த்த நிலைமையையாவது அவர் புரிந்து கொள்வார் என நம்புகிறேன்.

**கேள்வி:** உங்கள் எதிர்ப்பையும் மீறி, ஜனாதிபதியும் அரசாங்கமும் 13ஆவது திருத்தத்தை நீக்கினால் அல்லது திருத்தங்கள் செய்தால் என்ன நடக்கும்?

**பதில்:** இது நடக்கக்கூடியது அல்ல. கடந்த வாரம் நாம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, நாடாளுமன்ற தெரிவுக்குழு என்னத்தைப் பிரேரிக்கின்றதோ, அதைத்தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். அதுவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு நாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் கோருவதற்கான காரணம். நாம் 100 வீதமான தீர்வை அடைய முடியாமல் விட்டாலும், சில விடயங்களிலாவது இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

**கேள்வி:** ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணைந்து பணியாற்ற வரும் என எப்படி நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

**பதில்:** நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளும்படி நாம் அவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க விரும்புகின்றோம். இதுபற்றிக் கலந்துரையாட விரும்புகின்றோம். இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண நாம் விரும்புகின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தொடர்ந்து தன்னை விலக்கி வைத்திருப்பதால், எம்மால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது. அதனால்தான் அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வரும்படி நாம் அழைக்கின்றோம்.

**கேள்வி:** இதற்கு என்ன மாதிரியான சமிக்ஞை தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து உங்களுக்குக் கிடைத்துள்ளது?

**பதில்:** எமது கூட்டமைப்பின் கூட்டம் நடைபெற்றது டிசம்பர் 8அம் திகதியில் ஆகும். இந்த நாள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் வரவு செலவுத் திட்ட வாக்களிப்பு என்பன காரணமாக நெருக்கடியான தினமாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு செய்தி அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் தொடர்ந்தும் இவ்விடயத்தைக் கலந்துரையாட வாய்ப்புக் கிடைக்கவில்லை. விரைவில் அவர்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து பதிலைப் பெறலாம் என்று நம்புகின்றோம்.

**தமிழ் மொழிபெயர்ப்பு: சுலோசனா**

## கூலி என்றால் என்ன?

*ஒரு பண்டத்தின் விலை என்பது, அதை உற்பத்தி செய்ய ஆகும் செலவவுக்கு சமம் என்பதைப் போலவே, தொழிலாளியின் குறிப்பிட்ட மணிநேர உழைப்புக்கு கொடுக்கும் கூலியானது, அதை அந்த தொழிலாளி மறு உருவாக்கம் செய்து கொள்ளும் செலவுக்கு சமம் ஆகிறது. அதாவது ஒரு தொழிலாளி உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், தனக்கு பிறகு இன்னொரு தொழிலாளியை உருவாகும் விதமாக தன் குடும்பத்தை பராமரிக்க ஆகும் செலவு, என்ற இவற்றின் மொத்த தொகையே அவனது கூலியை நிர்ணயம் செய்கின்றது.*

# முன்மாதிரியான பின்லாந்தின் கல்வி முறை

Programme for International Student Assessment (PISA) என்பது சர்வதேசரீதியில் மாணவர்களின் செயற்பாட்டுத் திறமையைக் கணிப்பிடுவதற்காக, பொருளாதார வளர்ச்சி அமைப்பினால் (Organization for Economic Development – OECD) முன்னெடுக்கப்படுகின்ற செயல்பாடாகும். இக்கணிப்பீடு 1997இல் இருந்து 3 வருடங்களுக்கு ஒருமுறை 15 வயதுடைய மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப் படுகின்றது. இக்கணிப்பீட்டிற்குப் பயன்படும் முக்கியமான பாடங்கள் வாசிப்பு, கணிதம், விஞ்ஞானம் என்பனவாகும்.




2000ஆம் ஆண்டில் 15 வயதுடைய மாணவர்கள் மத்தியில் பெறப்பட்ட PISA கணிப்பீட்டில் பின்லாந்து மாணவர்களே உலகிலேயே வாசிப்பதில் முன்னணியில் உள்ளனர். பின்னர் 2003இல் பெறப்பட்ட கணிப்பீட்டில் கணிதத்திலும் பின்லாந்து மாணவர்களே முன்னணியில் உள்ளனர். 2006இலிருந்து 57 நாடுகளில் நடாத்தப்பட்ட கணிப்பீட்டில் விஞ்ஞானத்திலும் பின்லாந்து மாணவர்களே முன்னணியில் உள்ளனர்.

## காவலூர் பாலன்

ஒருசில ஆசிய நாடுகள் பின்லாந்திலும் பார்க்க கணிதத்தில் முன்னிலையைப் பெற்றுள்ளன. அண்மையில் சீனாவின் சாங்காய் நகரம் கணிதம், விஞ்ஞானம், வாசிப்பு என்பனவற்றில் முன்னிலையைப் பெற்றுள்ளதும் இங்கு கவனிப்புக்குரியது. ஆனால் ஆசியாவைச் சேர்ந்த ஆசிரியர்கள், தமது மாணவர்கள் கல்வியில் மாத்திரம் கவனம் செலுத்துவதால், விளையாட்டு, இசை போன்ற இன்னபிற துறைகளில் அக்கறை இல்லாமல் அவற்றை ஒதுக்கி விடுவதாகக் கவலைப்படுகின்றனர்.

இவ்வாறு பின்லாந்தின் மாணவர்கள் உலகிலேயே கல்வியில் முதன்மை இடத்தைப் பெறுவதற்கான பின்னணி என்ன என்பதை இப்போது ஆராய்வோம். மேலும் இந்த முன்னிலைப் பாத்திரத்தை அடைவதற்கு எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதையும் இங்கு உற்று நோக்குவோம்.

உண்மையில் இது ஓர் எளிமையான சாதாரண அணுகுமுறையாகும். அதாவது உலகின் முன்னேறிய மேற்கத்தைய நாடுகளின் கல்விச் செயல்பாடுகளுக்கு நேர் எதிரானதே பின்லாந்தின் கல்வித் திட்டமாகும். அவை பின்வருமாறு அமைந்துள்ளன:

1. குழந்தைகள் 7 வயதை அடையும்வரை பாடசாலைக் கல்விக்கு உட்படுத்தப்படுவதில்லை.

2. மாணவர்கள் பதின்ம வயதை (Teen Age) அடையும்வரை பரீட்சையோ, வீட்டுப் பாட வேலையோ கொடுக்கப்படுவதில்லை.

3. முதல் 6 வயதுவரை அவர்களது தராதரம் கணிக்கப்படுவதில்லை.

4. திறமையுள்ள மாணவனோ, திறமை குறைந்தவனோ, ஒரே வகுப்பிலேயே ஒன்றாகக் கற்பார்கள்.

5. 30 வீதமான மாணவர்கள் 9 வயதுவரை பிரத்தியேக உதவியைப் பெறுவார்கள்.

6. விஞ்ஞான வகுப்பில் ஆகக்கூடிய தொகை 16 பேர் மட்டுமே. எனவே அவர்கள் எல்லோரும் செயல்முறைப் பயிற்சியில் ஈடுபட முடியும்.

7. 93 வீதமான மாணவர்கள் உயர் பாடசாலைக் கல்வியை (Academic / Vocational) முடிப்பார்கள். அதில் 43 வீதமானவர்கள் தொழில் பயிற்சிக் (Vocational) கல்லூரிக்கே செல்வார்கள். (இது அமெரிக்காவைவிட 17.5 வீதத்தால் கூடியதாகும்)

8. ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு 75 நிமிட ஓய்வு வழங்கப்படும். (அமெரிக்காவில் இது 27 நிமிடங்கள் மட்டுமே)

9. ஆசிரியர்கள் ஒரு நாளில் 4 மணித்தியாலங்கள் மட்டுமே வகுப்பறையில் மாணவர்களுடன் செலவிடுவார்கள். மேலும் கிழமைக்கு 2 மணித்தியாலங்கள் மாணவர்கள் தொழில் தகைமை வளர்ச்சிப் (Professional Development) பயிற்சிக்குக் கூட்டிச் செல்லப்படுவார்கள்.

10. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 1.1 மில்லியன் (11 இலட்சம்) மாணவர்களைக் கற்பிக்கும்

ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவே பின்லாந்தில் 600,000 (6 இலட்சம்) மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணியில் ஆசிரியர்கள் உள்ளனர்.

இனி பின்லாந்தின் ஆசிரியர் தெரிவு பற்றியும், அவர்களது கல்வித் தகைமை, சமூக நிலை, ஊதியம் என்பவற்றை இப்போது நோக்குவோம்.

அ. பல்கலைக்கழகத்தில் மிகத் திறமையான முதல் 10 வீதமான மாணவர்களே ஆசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பின் அவர்களும் M.A / Masters Degree பெற்ற பின்னரே கற்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். இக்கற்றலுக்கான மானியம் அரசால் வழங்கப்படும்.

ஆ. ஆசிரியர்களின் ஆரம்ப வருடாந்தக் கொடுப்பனவு 29,000 அமெரிக்க டொலர்கள் (2008 ஆண்டில்)

இ. இவர்களுக்கும் வைத்தியர்கள், வழக்குரைஞர்கள் போன்றோர்களுக்கு வழங்கப்படும் மரியாதையே உண்டு. அதாவது ஒரே தரத்திலேயே வைத்துக் கணிக்கப்படுவர்.

ஈ. 15 வருடக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவர், கல்லூரிப் பட்டதாரிகளின் சம்பளத்தின் 102 வீதத்தைப் பெறுவார்கள்.

உ. ஆசிரியர்களுக்கு தராதரத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதில்லை.

11. 6 வயதை அடைந்த 97 வீதமான குழந்தைகள் அரசாங்கப் பாடசாலைகளுக்கே செல்கின்றனர். அங்கே சில ஆரம்ப அறிவூட்டல்கள் தொடங்குகின்றன. 7 வயதில்தான் முறையான கற்பித்தல் தொடங்குகின்றது.

12. பின்லாந்தில் 3,500 பாடசாலைகளில் 62,000 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள்.

13. அநேகமான பாடசாலைகள் சிறியவை. எனவே ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் தெரிந்திருப்பார்கள்.

14. உயர் வகுப்புப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் 66 வீதமானவர்கள், உயர் கல்விக்காக கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இது ஏனைய ஐரோப்பிய யூனியன் நாடுகளை விட அதிகமானதாகும்.

15. இவ்வளவிற்கும் பின்லாந்து ஒரு மாணவனுக்குச் செலவிடும் தொகை, அமெரிக்கா செலவிடுவதைவிட 30 வீதம் குறைவானதாகும். கனடாவைவிட 13 வீதம் குறைவானதாகும்.

16. உலகிலேயே இங்கே உள்ள மாணவர்கள் மத்தியில்தான், மிகத் திறமையான மாணவர் ஒருவருக்கும், மிகப் பின்தங்கிய மாணவர் ஒருவருக்குமடையிலான இடையிலான அறிவுத்திறன் இடைவெளி மிகக் குறைவானதாகும்.

17. 16 வயதிலேயே மாணவர்கள் முதன்முதலாக ஒரு தராதரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கின்றனர். அதற்கு முன்னதாக எந்தப் பரீட்சையும் இல்லை.

18. பின்லாந்தில் வறுமையில் வாடுபவர்கள் வீதம் 3.4 ஆகும். கனடாவில் வறுமையில் வாடுபவர்கள் 13.6 வீதத்தினர் ஆகும். ஏனெனில் அந்த நாடு இன்னமும் ஒரு சமூக நலன் பேணும் சமூகமாகவே (Welfare Society) இயங்குகின்றது. ஆனால் ஏனைய முன்னேறிய நாடுகளில், சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடனும், நவ காலனித்துவத்தின் கீழும், மக்கள் முன்னர் பெற்றிருந்த உரிமைகளையும், பல சலுகைகளையும் இழந்துகொண்டு வருகிறார்கள்.

19. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இயன்றளவு குறைந்தளவு வீட்டு வேலையே கொடுக்கின்றனர். அத்துடன் விளையாட்டு, நாடகம், இலக்கியம், இசை போன்ற ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுமாறும் தூண்டப்படுகிறார்கள்.

20. OECD நாடுகளில் ஒரு மாணவர், ஒரு வருடத்திற்கு வகுப்பறையில் 810 மணித்தியாலங்களைக் கற்றலில் ஈடுபடும்போது, பின்லாந்தில் 640 மணித்தியாலங்களையே கற்றலில் கழிக்கிறார்கள்.

இங்கே குறிப்பிட்ட பல விடயங்களையும் ஒன்றுபடுத்திப் பார்ப்போமானால், நாம் பின்லாந்தின் கல்வி வளத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

பொருளாதாரத்தில் முன்னேறிய ஏனைய நாடுகளில் நடைமுறையிலுள்ள போட்டிக் கல்வி முறையுடன் ஒப்பிடும்போது, பின்லாந்தில் உள்ள புதிய நடைமுறையில் போட்டி அற்ற சமத்துவக் கல்வி முறையே அமுலில் உள்ளது. இதன் அடிப்படையில் முன்னேறிய - பின்தங்கிய எல்லா மாணவர்களுக்கும், அவர்கள் என்ன பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், எப்படிப்பட்ட குடும்பப் பொருளாதார நிலையிலிருந்தாலும், கற்றலில் சம சந்தர்ப்பமே வழங்கப்படுகிறது. இதில் முக்கிய விடயமென்னவெனில், போட்டி முறையில் அதிமேதாவிகளை உற்பத்தி (Produce Star Performers) செய்வதல்ல அங்குள்ள கல்வி முறையின் நோக்கம். மாறாக சமூக சமத்துவமின்மையைக் குறைப்பதே கல்வியின் நோக்கமாக உள்ளது.

இப்பொழுது பின்லாந்து நாட்டின் இருப்பிடம், வரலாறு என்பவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

இது ஒரு ஸ்கான்டிநேவியன் (Scandinavian) நாடு.

அதன் எல்லைகளில் கிழக்கே ரஸ்யா, மேற்கே சுவீடன், வடக்கே நோர்வே என்பன உள்ளன.

600 வருட காலத்திற்கு மேற்பட்ட ஆட்சியிலிருந்து பின்லாந்து நாடு சுவீடனால் ரஸ்யாவிற்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது. 1917இல் ரஸ்யாவில் ஏற்பட்ட போல்ஸ்விக்குகளின் சோசலிசப் புரட்சிக்குப் பின்னர், பின்லாந்து தன்னை ஒரு தனி நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. அதன் முடிவு அப்பொழுது லெனின் தலைமையிலான சோவியத் அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

ஆனாலும் ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதலால், 1939 - 1945இற்கு இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியனுடன் இருமுறை சண்டைகளில் ஈடுபட்டது. அதேபோல் பின்னர் ஜேர்மனியுடனும் போர் புரிந்தது. தற்போது அந்த நாட்டின் மக்கள் தொகை 5.4 மில்லியன்கள் ஆகும். அதில் வெளிநாட்டவர்கள் 4 வீதம் மட்டுமே.

பின்லாந்தின் அரச கரும மொழிகள் பினிஸ், சுவிடிஸ் என்பன ஆகும். ஆனாலும் 3ஆவது மொழியாக ஆங்கிலம் பெரும்பான்மையானவர்களால் கற்றலுடன் பேசப்படுகிறது. தொடர்பாடல் ஊடகமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

பின்லாந்துடன் ஒப்பிடும்போது, எமது இலங்கை பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு மூன்றாம் உலக நாடாக இருந்த போதிலும், 1930களிலேயே எமது மதிப்புக்குரிய C.W.W. கன்னங்கார அவர்களால் எல்லோருக்கும் இலவசக் கல்வி என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று மிக முன்னேறிய முதலாம் உலகத் தரத்தை எட்டியுள்ளது. அதுமாத்திரமல்ல, இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து ஒரு சமூக நலத்திட்ட (Welfare) நாடாக, இலவசக் கல்வி, இலவச மருத்துவம், இலவச உணவு உதவி என மக்களின் நல வாழ்வுக்கே முக்கியத்துவம் வழங்கி வருகின்றது.

அண்மையில் வெளிவந்த பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைப் பெறுபேறுகளில்கூட, 9 வயதிலேயே இரு கண்களின் பார்வையையும் இழந்த சுன்னாகத்தைச் சேர்ந்த, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் கலைப்பிரிவில் 3 ஏ சித்திபெற்று, மாவட்டத்தில் 4ஆவது இடத்தைக் கைப்பற்றியுள்ளார். இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவெனில், இம்மாணவன் ஏனைய எந்த அங்கக் குறைபாடும் இல்லாத மாணவர்களுடன் ஒன்றாக இருந்தே கல்வி கற்றுள்ளான்.

ஆனால் இங்கே நாம் புலம்பெயர்ந்து வந்து வாழும் கனடாவில், கல்விக்கான செலவீனங்கள் தொடர்ந்து வெட்டப்படுவதுடன், மாணவர்கள் மேல் அதிக சுமை ஏற்றப்படுவதுடன், ஆசிரியர்களின் உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாக அண்மையில் ஒன்ராறியோ மாகாண அரசு ஆசிரியர்களின் வேலை நிறுத்த உரிமைக்கு எதிராக சட்டம் 115ஐ அமுலுக்குக் கொண்டு வந்ததைக் குறிப்பிடலாம். அதேபோல் 1990 - 1991 மற்றும் 1995 - 1996 ஆண்டுகளில் ஒன்ராறியோ மாகாணமே அதி குறைந்த செலவிலான பல்கலைக்கழகக் கல்வியை வழங்கியது. அன்று முழு கனடா நாட்டிலும் சராசரி கல்விச் செலவு வருடமொன்றுக்கு 2,053 டொலர்களாக இருந்தது. ஆனால் இன்று நாட்டின் மற்றைய பகுதிகளில் கல்விச் செலவீனம் ஆண்டொன்றுக்கு 5,581 டொலர்களாக இருக்கையில், ஒன்ராறியோ மாகாணத்தில் இது 7,180 டொலர்களாக உள்ளது.

எனவே ஒரு மாணவன் தனது பல்கலைக்கழக கல்வியை (4 வருடங்களில்) முடித்துப் பட்டதாரித் தராதரத்துடன் வெளியேறும்போது, குறைந்தது 20,000 டொலர்கள் தொடக்கம் 40,000 டொலர்கள் வரையிலான கடனுடனும், வேலை அற்ற நிலையிலுமே வெளியேறுகிறான்.

இது சம்பந்தமாக வட அமெரிக்காவிலேயே மிகப்பெரிய மாணவர் போராட்டம் ஒன்றை நடாத்திய, (பிரெஞ்சு மொழி பேசும்) கியூபெக் மாகாண மாணவர்கள், அம்மாகாண அரசு கொண்டு வந்த கல்விச் செலவீன அதிகரிப்பை நிறுத்தி வைத்ததுடன், கனடாவிலேயே மிகக் குறைந்த பல்கலைக்கழகக் கல்விக் கட்டணத்தைச் செலுத்தும் உரிமையையும் தற்காத்துக் கொண்டுள்ளனர்.

இதில் ஒரு கவலையான விடயமென்னவெனில், கனடாவில் வாழும் எமது தமிழ் மாணவர்கள் கனடாவின் தேசிய நீரோட்டத்தில் என்ன நிகழ்கின்றது என்று தெரியாதவர்களாக அல்லது அக்கறை அற்றவர்களாக, புலிகளால் விதைத்து விடப்பட்ட பிற்போக்கு தமிழ் தேசியவாத அலையில் அள்ளுண்டவர்களாக இருக்கின்றனர். 2009இல் இறுதிக்கட்டப் போர் நடந்த போது, புலிகளைக் காப்பாற்றும்படி கோரி கனடாவின் சட்ட திட்டங்களை மீறி, அந்நாட்டின் பெரும் தெருக்களை மறித்து கனடிய மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கும் அளவுக்குத்தான், கனடிய தமிழ் சமூகம் இருந்தது.

எமது சமூகம் உலகத் தரத்துக்கு வளர்ச்சி பெற வேண்டுமானால், உலகின் முன்னேற்றகரமான சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார முறைகளைத் தனக்குள் உள் வாங்குவதன் மூலமே அந்த நிலையை அடைய முடியும். இதற்கு எமது சமூகத்திலுள்ள உரத்துச் சிந்திக்கக்கூடிய கல்வியாளர்கள், புத்திஜீவிகள் முன் கையெடுத்துச் செயல்பட வேண்டும். *

"மார்க்ஸ் மட்டுமே முதன்முதலாக பொருளாதாரம் என்பது பொருட்கள் சம்பந்தப் பட்டது அல்ல. மாறாக மனிதர்களுக்கிடையிலான உறவுகள் சம்பந்தப்பட்டது. இன்னும் அடிப்படையாகச் சொன்னால் வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகள் சம்பந்தப்பட்டது. எனினும் இந்த உறவுகள் எப்போதும் பொருட்களோடு இணைக்கப் பட்டுள்ளன, பொருட்களாகவே தோற்றம் பெறுகின்றான என்று வரையறுதார். அவரது இந்த வரையறையை இப்போது முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக் கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்"

**- ஏங்கல்ஸ் -**

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பயங்கரவாதிகளை ஆதரிக்கிறாரா?



யாழ்ப்பாணத்திலிருந்து 'உதயன்' என்றொரு நாளிதழ் கடந்த பல வருடங்களாக வெளிவருகிறது. இதன் உரிமையாளர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஈ.சரசணபவன். (இவர் முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிய 'சப்றா பினான்ஸ்' நிறுவனத்தில் முக்கிய நிர்வாகியாகவும் இருந்தவர். இந்த நிறுவனத்தில் பொதுமக்கள் வைப்பிலிட்ட போடிக்கணக்கான பணத்தை அந்த நிறுவனம் திருப்பி வழங்காமல் கைவிரித்ததால், பலர் ஏமாற்றப்பட்டதுடன் சிலர் மனமுடைந்து தற்கொலையும் செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது)

உதயன் பத்திரிகையின் பிரதான பணி கண்மூடித்தனமான அரச எதிர்ப்பு என்பதை யாழ் மக்கள் நன்கு அறிவர். அதன் உரிமையாளர் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் மிகவும் நெருக்கமாகக் கூடிக் குலாவியவர். இப்பொழுதும் அந்த உறவு உண்டு. அந்த உறவு அவர் தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு ஒரு தடையாக அமையவில்லை. அதற்குக் காரணம் கூட்டமைப்புத் தலைமையே ஐ.தே.கவுடன் தேன் நிலவு கொண்டாடுகையில், சரவணபவன் கூட்டமைப்புத் தலைமைக்கு ஒரு பொருட்டல்ல. இவர்கள் தமக்கு ஏதாவது தேவையென்றால் அரச தலைமையிடமும் குலாவத் தயங்கமாட்டார்கள்.

எனவே தமிழரசுக் கட்சியில் எத்தனையோ மூத்த உறுப்பினர்கள் இருக்க சரவணபவன் மிகச் சுலபமாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராகிவிட்டார். அவரை தனது வேட்பாளராக நியமிப்பதற்கு முன்னர், பொதுமக்களை ஏமாற்றிய சப்றா பினான்ஸ் நிறுவனத்தில் அவரது பங்கு பணி என்னவாக இருந்தது என்பது பற்றி கூட்டமைப்பு ஆராயவோ, அதைப்பற்றிக் கவலைப்படவோ இல்லை.

சரவணபவனின் உதயன் பத்திரிகை தினசரி அரச எதிர்ப்பு வாந்தி எடுப்பது ஒருபக்கம் இருக்க, அப்பத்திரிகை வெளிப்படையாகவே புலிகள் இருந்த காலத்திலும் சரி, அவர்கள் அழிக்கப்பட்ட பின்னரும் சரி, அவர்களை ஆதரித்து எழுதி வருகிறது. அதற்குப் பல உதாரணங்கள் இருப்பினும் சமீபத்திய உதாரணம் ஒன்று.

2013 மார்ச் 14ஆம் திகதிய உதயன் வெளியீட்டில் 'இந்தியாவின் துரோகம் வெளிச்சத்துக்கு வந்தது' என்றொரு செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி அண்மையில் இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்த ஒரு கருத்தை வைத்தே, இந்தியா துரோகம் இழைத்துவிட்டது என குறித்த செய்திக்கு உதயன் தலைப்பிட்டுள்ளது.

**வி.சிவஞானம்**

அந்தோனி தெரிவித்த தகவலில், 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தின்படி, தமிழ் நாட்டுக்கும் இலங்கையின் வட மேற்குக் கடல் பகுதிக்கும் ( வடபகுதி தீவுகளில் தொடங்கி நீர்கொழும்பு வரையிலான பகுதி) இடையில் இந்திய மீன்பிடிப்படகுகளை ஒரு குறிப்பிட்ட காலம் மீன்பிடிக்காமல் செய்ததின் மூலம், புலிகளின் கடல்வழி விநியோக மார்க்கத்தை முடக்கி, இலங்கை இராணுவத்துக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததாகக் கூறியிருந்தார்.

இதைத்தான் உதயன் பத்திரிகை இந்தியாவின் துரோகம் எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவின் இந்த நடவடிக்கை யாருக்குத் துரோகம் இழைத்துள்ளது என உதயன் வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும், அது புலிகளுக்குத் துரோகம் இழைத்துள்ளது என்பதே உதயனின் குற்றச்சாட்டு என்பது வெளிப்படையான விடயம்.

1977இல் ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பின்பற்றிய இந்திய விரோத, அமெரிக்க சார்புக் கொள்கையால், இந்தியா தவிர்க்க முடியாத சூழலில் இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்து, இலங்கையை ஒரு பேரழிவுக்குள் தள்ளிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அதன் பின்னர் வந்த இந்திய அரசுகள், 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய' புலிகள்

இயக்கத்தின் அபாயகரமான போக்கை எப்படியும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் உறுதியாகச் செயல்பட்டன.

உண்மையில் இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் புலிப் பயங்கரவாத பாசிச இயக்கத்தை அழித்திருக்கவே முடியாது. அதன் மூலம் இன்று இலங்கை மட்டுமின்றி, இந்தியாவும் புலிப் பயங்கரவாதத்திலிருந்து தப்பியுள்ளது. ஒரு ஜனநாயக நாடு தனது அயலிலுள்ள இன்னொரு ஜனநாயக நாட்டை பயங்கரவாதப் பிடியிலிருந்து விடுதலை பெற உதவியதில் (தனது முன்னைய தவறைச் சரி செய்ததில்) என்ன துரோகம் இருக்கிறது? புலிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கடத்தி வந்து இலங்கை அரச படைகளுடன் யுத்தம் செய்யவும், பொதுமக்களைக் கொலை செய்யவும் இந்தியா வழி விட்டிருக்க வேண்டும் என உதயன் கருதுகின்றதா?

இந்த நடவடிக்கையை உதயன் இந்தியாவின் துரோகம் என வர்ணிக்குமாக இருந்தால், அது வெளிப்படையாக புலிப் பயங்கரவாதிகளை ஆதரிக்கிறது என்றுதான் அர்த்தமாகும். இவ்வாறான ஒரு செய்தியை வெளியிட்ட உதயன் வெறுமனே ஒரு வியாபாரப் பத்திரிகை மட்டுமல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கொள்கை பிரச்சாரப் பத்திரிகையாகவும் இருப்பதால், அதில் வெளியான இந்தக் கருத்துக்கும் அந்த பாராளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவனுக்கும் தொடர்பு உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே இலங்கையில் உள்ள சட்டங்களின்படி, அரசாங்கத்துடன் 30 வருடப் போரில் ஈடுபட்ட ஒரு பயங்கரவாத இயக்கம் பற்றி ஒரு ஊடகம் இவ்வாறாக செய்தி வெளியிடுவது சரியா என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்துவது அவசியம். அத்துடன் தனது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பயங்கரவாத இயக்கமொன்றுக்கு ஆதரவாகத் தனது ஊடகம் ஒன்றில் பிரச்சாரம் செய்வது சரியா என்பதை, ஜனநாயக வழியில் செயல்படுவதாகச் சொல்லும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விளக்குவதும் அவசியமாகும். *

# 1972இல் இந்திய பொலிசாரால் கைது செய்யப்பட்ட நக்சல்பாரி இயக்கத்தின் ஸ்தாபகர் சாருமஜூம்தார் விசமூட்டிக் கொல்லப்பட்டார்!

1972இன் நடுப்பகுதியில் அந்தச் செய்தி வெளிவந்தது. இந்தியாவின் கீழ்வானத்தில் விடுதலைக்கான வெள்ளியாக உருவாகி, புரட்சிக்கு முன்னணி வகித்த நக்சல்பாரி பேரியக்கத்தின் மாபெரும் புரட்சியாளர் தோழர் சாருமஜூம்தார் காவல்துறையின் பிடியில் அகப்பட்டார். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர் லால்பஜார் ஹெட் குவாட்டர்சுக்குக் கொண்டு வரப்பட்டார். இரண்டாவது மாடியிலுள்ள ஒரு அறையில் அடைக்கப்பட்டார்.

நாங்கள் அங்கே பாரா காவலராகப் பணியிலிருந்தோம். நான் அவரைப் பார்ப்பதற்காகச் சென்றேன். அந்தப் பக்கமாகப் போவதற்குக்கூட எங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் மதிய நேரம், அவர் நீண்ட நேரமாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார். இடையிடையே நிற்பார். அப்போது நீண்ட ஒரு மூச்சு விடுவார். மீண்டும் நடக்க ஆரம்பிப்பார். ஆஸ்த்துமா போல் தோன்றியது. கடினமான சுவாசத் தடையிருந்தது. என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பவும் நடக்கத் துவங்கினார். எங்களிடையிலான அறிமுகம் இத்துடன் முடிந்து போனது.

என்றாலும் சிங்கம் போன்ற பெரிய தலையும், கண்களும், மெலிந்த உடலும், அந்தக் கம்பீரமும் மனதில் படிந்துவிட்டது. லால்பஜாரில் வைத்து அவரை மருத்துவர்கள் பரிசோதனை செய்வதுண்டு. ஒரு வாரம்வரை அங்கே இருந்திருப்பார். ஒரு நாள் அவர் இறந்து போனதாக அறிவிக்கப்பட்டது. விச மருந்தைச் செலுத்தி அந்த வீர புருசனைக் கொன்றதாகப் பின்னர் தெரிய வந்தது. பூத உடலைப் பார்ப்பதற்குக்கூட எங்களை அனுமதிக்கவில்லை.
அந்த உடலை அவர்கள் என்ன செய்தார்களென்றும் தெரியாது. அப்படியாக ஒரு யுக புருசனின், செயல்வீரனின், விவசாயப் பெருங்குடிகளின் உற்ற தோழனை, அடிமைகளின் இரட்சகனின் உயிர்த்துடிப்பு அடங்கியது. அதை அவர்கள் கொண்டாடியிருக்கக்கூடும். இந்த சம்பவங்களைத் தற்செயலாக நான் பார்த்ததும், வெளிப்படையாகச் சொல்ல முடிந்ததும் ஏதோ ஒரு விதியின் வினை போலவே தோன்றுகிறது.



தோழர் சாருமஜூம்தார்

(கேரளாவில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட வர்க்கீஸ் என்ற நக்சல்பாரிப் போராளியை பொலிஸ் மேலிடத்தின் நிர்ப்பந்தத்தால் சுட்டுக் கொன்ற இடதுசாரிச் சிந்தனையாளரான காலஞ்சென்ற பொலிஸ்காரர் ராமச்சந்திரன் நாயர் என்பவரின் வாக்கு மூலமாக வெளிவந்துள்ள 'நான் வாழ்ந்தேன் என்பதற்கான சாட்சி' என்ற நூலில் மேற்கண்டவாறு அவர் கூறியிருக்கிறார்) *

# வெனிசூலா ஜனாதிபதி சாவேஸ் மரணத்தில் சந்தேகம்!

## "சாவேஸ் ஏழைகளின் ஏசு கிறிஸ்து"

-சாவேஸ் மரணித்த போது ஒரு ஈரானிய மதத் தலைவர் கூறியது

வெனிசூலாவின் ஜனாதிபதியாக 14 ஆண்டுகள் மக்களின் மாபெரும் ஆதரவுடன் ஆட்சி செய்த ஹூவே சாவேஸ் அவர்கள் புற்றுநோய் காரணமாக 2013 மார்ச் 5ஆம் திகதி காலமானார். அவரது பிரிவுத் துயரால் வெனிசுலா மக்களும், உலகம் முழுவதுமுள்ள முற்போக்கு மக்களும் இன்னமும் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சோகத்துக்கிடையில் அவருக்கு வந்த புற்றுநோய் இயல்பானதா அல்லது திட்டமிட்டு அவரது உடலில் விதைக்கப்பட்டதா என்ற சந்தேகம் அவரது நெருங்கிய தோழர்கள், நண்பர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தேகத்தைக் கிளப்பியவர்களில் ஒருவர் ரஸ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் கென்னடி ஜூகானவ் ஆகும். அவர் எழுப்பியுள்ள சந்தேகத்தில், "அதெப்படி லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 6 தலைவர்களுக்கு அடுத்தடுத்து புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டது? புற்றுநோய் பாதித்த ஆறு பேருமே தங்களது நாடுகளை சுதந்திரமான, இறையாண்மை மிக்க தேசங்களாக வழி நடாத்திக் கொண்டிருப்பவர்கள்" என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது சம்பந்தமாக சோவியத் யூனியன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைய ரஸ்யாவிலும் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கும் பிரபல பத்திரிகையான 'பிராவ்டா', கடந்த இரண்டு தசாப்த காலத்தில் அடுத்தடுத்துப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட பல தலைவர்களின் பட்டியலை வெளியிட்டிருக்கிறது. அந்தப் பட்டியல் வருமாறு:




1. 1996இல் பாலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் காலிட் மெஸ்ஸால் (Khaled Meshaal) அவர்களுக்கு நஞ்சூட்டப்பட்டதால் அவரது மூளை செயலிழந்தது.

2. 2004ஆம் ஆண்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் (பின்னர் பாலஸ்தீன ஜனாதிபதி) யஸ்ஸார் அரபாத் (Yassar Arafat) நஞ்சூட்டப்பட்டதால் மூளை பாதிக்கப்பட்டு பின்னர் இறந்தார்.

3. 2006இல் ரஸ்யாவின் முன்னாள் இரகசிய சேவை அதிகாரி அலெக்ஸாண்டர் லிற்வினென்கோ (Alexander Litvinenko) பொலோனியம் - 210 (Polonium – 210) என்ற நஞ்சூட்டப்பட்டார்.

4. 2009இல்தற்போதைய பிரேசிலின் பெண் ஜனாதிபதி டில்மா வானா றவ்ஸெஃவ் (Dilma Vana Rousseff) உடம்பிலுள்ள கழிவு நீரை எடுத்துச் செல்லும் அமைப்பில் புற்றுநோய்க்குள்ளானார்.

5. 2009இல் பொலிவியாவின் தற்போதைய ஜனாதிபதி ஈவோ மோரேல்ஸ் (Evo Morales) அவர்களுக்கு மூக்குத் துவாரத்தில் புற்றுநோய் ஏற்பட்டது.

6. 2010இல் பரகுவே நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பெர்னான்டோ லூகோ (Fernando Lugo) அவர்களுக்கு ஒருவகைப் புற்றுநோய் ஏற்பட்டது.

7. 2010இல் ஆர்ஜன்ரீனாவின் முன்னாள் ஜனாதிபதி நெஸ்ரர் கேர்ச்னர் (Nestor Hirchner) அவர்களுக்கு குடற் புற்றுநோய் ஏற்பட்டது.

8. 2011இல் பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாஸியோ லூலா டா சில்வா அவர்களுக்கு (Luiz Inacio Lula Da Silva) குரல்வளையில் புற்று நோய் ஏற்பட்டது.

9. 2011இல் வெனிசூலா ஜனாதிபதி ஹூவே சாவேஸ் (Hugo Chavez) அவர்களுக்கு புறொஸ்ரேற் புற்றுநோய் ஏற்பட்டது.

10. 2011 பெரு நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ஒல்லன்ரா ஹூமாலா (Ollanta Humala) அவர்கள் குடல் நரம்புப் புற்றுநோய்க்கு உள்ளானார்.

11. 2011இல் ஆர்ஜன்ரீனாவின் தற்போதைய பெண் ஜனாதிபதி கிறிஸ்ரீனா கேர்ச்சினர் (Cristina Kirchner) அவர்கள் தொண்டைப் புற்றுநோய்க்கு ஆளானார்.

இதுதவிர, லத்தீன் அமெரிக்காவில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஏகாதிபத்திய எதிர்ப்புக் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து வரும் கியூபாவின் புகழ்மிக்க புதல்வன் ஃபிடல் கஸ்டரோ அவர்களுக்கும் ஒருவகைப் புற்றுநோய் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பெரும்பாலும் லத்தீன் அமெரிக்காவில் உள்ள பல நாடுகளில் அண்மைக் காலங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தலைவர்களாகத் திகழ்ந்த அல்லது திகழும் தலைவர்களுக்கே இந்தப் புற்றுநோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 50 ஆண்டுகளாக கியூபா மட்டுமே லத்தீன் அமெரிக்காவின் ஒரேயொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடாகவும், சோசலிச நாடாகவும் இருந்தது. புரட்சிகர

கியூபா அயராது மேற்கொண்ட போராட்டங்களின் காரணமாகவும், அதன் முன்னுதாரணமான சோசலிச அமைப்புமுறை காரணமாகவும், ஏகாதிபத்திய ஆதிக்கம் மற்றும் சுரண்டல் காரணமாகவும், பல லத்தீன் அமெரிக்கா நாடுகளின் மக்கள் தொடர்ந்து தமது நாடுகளில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஏகாதிபத்திய சார்பு இராணுவ ஆட்சிகளை ஜனநாயக வழிமுறைகளின் ஊடாகத் தூக்கி எறிந்து வருகின்றனர். இன்று தென் அமெரிக்கக் கண்டத்தில் ஏறத்தாழ 13 நாடுகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் பயணிக்கின்றன.

அவற்றில் ∴பிடலின் கியூபாவுக்கு அடுத்ததாக, சாவேஸ் அவர்களின் வெனிசூலா பீடு நடைபோட்டு முன்னேறி வந்தது. அதனைப் பொறுக்காதவர்கள் செய்த சதி வேலையே சாவேசுக்கு வந்த புற்றுநோய் என்ற சந்தேகம் இப்பொழுது அவரை நேசிக்கும் உலக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சாவேசுக்கு ஏற்படக்கூடிய அபாயம் குறித்து ∴பிடல் கஸ்ட்ரோ அவர்கள் தன்னிடமே ஒருமுறை பின்வருமாறு கூறியதாக ஒரு சந்தர்ப்பத்தில் சாவேஸ் தெரிவித்திருக்கிறார். அது வருமாறு:

“கவனமாக இரு என் தோழனே சாவேஸ்! அவர்கள் பயங்கரமான தொழில்நுட்பத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். நீ மிகவும் கவனம் இல்லாமல் இருக்கிறாய். என்ன சாப்பிடுகிறோம், எதைச் சாப்பிடக் கொடுக்கிறார்கள்...என்பதை கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒரு சிறிய ஊசி குத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தால் கூட உன் உடலில் விசத்தை ஏற்றி விடுவார்கள்.”

இப்படி சாவேசை எச்சரித்திருக்கிறார் ∴பிடல். ஆனால் அதையும் மீறி அவர் உயிர் பறிக்கப்பட்டுவிட்டது.

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...

# அண்ணன் மனோ கணேசன் பங்குபற்றும் எதிரணிக் கூட்டணி பற்றி தம்பி பிரபா கணேசன்!



அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்குடன் எதிரணிக் கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டது. ஆனாலும் இந்தக் கூட்டணியில் மூன்று முக்கிய எதிரணிக் கட்சிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, பொன்சேகாவின் கட்சி என்பன அங்கம் வகிக்கவில்லை. இந்தக் கூட்டணியின் தாரதம்மியம் பற்றி இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரான மனோ கணேசனின் தம்பியும், பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

“எதிரணிக் கூட்டணியில் கைச்சாத்திட்டவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தக் கட்சியும் கிடையாது. வெறும் இரண்டு நான்கு பேர் அங்கம் வகிக்கும் கட்சிகளைத்தான் ஐக்கிய தேசியக் கட்சி எதிரணிக் கூட்டணிக்குள் கொண்டு வந்துள்ளது.

இந்தக் கட்சிகளைக் கூட்டணிக்குள் வைத்துக்கொண்டு மாபெரும் சக்தியாக விளங்கும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதென்பது நகைச்சுவை நாடகத்தின் ஆரம்பப் பகுதியைப் பார்ப்பது போலுள்ளது.

மேடையில் கைகளை உயர்த்தி பிடித்துக் கொண்டிருப்பதை பார்க்கும் போது கடந்த ஜனாதிபதி தேர்தல்தான் ஞாபகத்திற்கு வருகிறது. அந்தத் தேர்தலிலும் கைகளை உயர்த்தி பிடித்து படுதோல்வியைத் தழுவினர். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதையும் வழங்கவில்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமின்றி சந்திரிகா அம்மையார் தமது தரப்பிலிருந்து தமிழ் மக்களுக்கான தீர்வினை கொண்டு வந்த பொழுது தீர்வின் பிரதிகளை நாடாளுமன்றத்தில் எரித்தது ஐக்கிய தேசியக் கட்சி என்பதனையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது.

தமிழ்க் கூட்டமைப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியும் தமிழ் ஊடகங்களுக்கு அனுப்பும் தமிழ் தீவிரவாத அறிக்கைகள் ஒன்றுவிடாமல் மொழி பெயர்க்கப்பட்டு சிங்களப் பத்திரிகைகள் ஊடாக சிங்கள மக்களுக்கு பறைசாற்றப்படுகிறது. இதன் மூலமாக இன்று எமது அரசாங்கத்திற்கு மேலதிகமான சிங்கள வாக்குகள் கிடைக்கப் பெறுகின்றன. இப்படியாக தமிழ் தேசியம் என்று கூறிக்கொண்டு தமிழ் தீவிரவாதம் பேசும் கட்சிகள் இன்றைய எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கத்திற்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொடுக்கின்றனர்.

அதனால்தானோ என்னவோ இவ்விரு கட்சித் தலைவர்களின் பிறந்த நாளுக்கு மிகவும் கரிசனமாக ஜனாதிபதி இவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றார் என நினைக்கின்றேன்”

இவ்வாறு பிரபா கணேசன் தனது அறிக்கையில் கூறியிருக்கின்றார். *

உரத்த சிந்தனை:

# பொருள்முதல்வாதமும் கருத்துமுதல்வாதமும்

மனிதர்கள் உயிர்வாழ்வது ஆகாரத்தினால் மட்டுமல்ல என்றும், தனிமனிதர் தன் நித்திய ஆன்மாவைப் பற்றிய நிறை அறிவைப் பெறுவதையே வரலாறு, சமுதாயம் ஆகிய இரண்டும் சார்ந்துள்ளது என்றும், மனித மதிப்பீடுகள் அனைத்தையும் பொருள்முதல்வாதமானது அழித்து விடுகிறது என்றும் சில வாசகர்கள் வலியுறுத்துகிறார்கள். துரதிஸ்டவசமாக ஆகாரமோ அதற்கு ஈடானதோ இல்லாமல் மனிதர் உயிர்வாழ முடிவதில்லை. ஆன்மாவை (அப்படி ஒன்று இருந்தால்) உடம்புக்குள் பிடித்து வைத்திருக்க ஆகாரம் இன்றியமையாததாக உள்ளது.

மனிதக் கூட்டம் ஏதோ ஒரு வகையில் தமக்கிடையில் பரஸ்பரம் உறவு கொண்டவர்களாக இருக்கும்போதுதான் - அப்போது மட்டும்தான் - அவர்கள் சமுதாயமாக அமைகிறார்கள். சாரமான உறவு இரத்த உறவு அல்ல, அதைவிடப் பரந்தது, அது உற்பத்தி மற்றும் சரக்குகளின் பரஸ்பர பரிமாற்றம் வழியாக வளர்வதாகும்.

ஒரு சமுதாயம் எவற்றைத் தேவையானதாகக் கருதுகிறது? அந்தப் பொருட்களை யார் திரட்டுகிறார்கள் அல்லது படைக்கிறார்கள் எந்தச் சாதனங்களைக் கொண்டு? மற்றவர்களின் உழைப்பில் - உற்பத்தியில் உயிர்பிழைப்போர் யார் எந்த உரிமையால் - சட்ட உரிமையாலா? சமய உரிமையாலா? (சட்டங்களும் சடங்குகளும் சமுதாயத்தின் உடன் உருவாக்கங்களே), கருவிகளையும் நிலத்தையும், சிலபோது உற்பத்தியாளர்களின் உடம்பையும் ஆன்மாவையுமே கூட, உடமையாக வைத்திருப்போர் யாவர் ஆகியவற்றைக் கொண்டே குறிப்பிட்ட ஒரு சமுதாயத்துக்குப் பெயர் சூட்டப்படுகிறது. உற்பத்தி உறவுகளாலேயே சமுதாயம் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது.

பொருள்முதல்வாதமானது, மனித மதிப்பீடுகளை அறவே அழிப்பதில்லை. மாறாக நடப்பு சமூக நிலைமைகளுடனும், சமூக மதிப்பீடுகள் குறித்து மேலோங்கி நிற்கும் கருத்தாக்கத்துடனும் அவை எவ்வாறு உறவு கொண்டுள்ளது என்பதைக் காட்டவே செய்கின்றது. மதிப்பீட்டைப் போல் மொழியும் (இது இன்றேல் கருத்துமுதல்வாதியானவர் தன் ஆன்மா பற்றிக் கருதக்கூட முடியாது) பொருள் பரிமாற்ற உறவுகளில் இருந்தே எழுந்தது. பொருள் பரிமாற்ற உறவுகளே கருத்துகளின் பரிமாற்றத்துக்கு இட்டுச் சென்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மாட்டு வண்டி ஓட்டிக் கொண்டிருந்த ஒரு நாட்டில் வைத்து வளர்த்தெடுக்கப்பட்ட "நித்திய" கருத்தியல்களைக் கொண்டு தனி ஒரு தத்துவவாதியானவர் ஒரு யாந்திரீக உலகைத் தன் இதயத்தின் விருப்பத்துக்கு மிக நெருக்கமாக மாற்றி அமைத்துவிட முடியாது.

***- பேராசிரியர் டி.டி.கோசாம்பி***
**Professor Damodar Dharmanand Kosambi**

*'இந்திய வரலாறு – ஓர் அறிமுகம்' என்ற நூலில்*

## கருத்து

ஐம்புலன்களால் அறிய முடியாதவை என்று ஏதேனும் உண்டா?
ஆம். ஐம்புலன்களால் அறிய முடியாதவைகள் உண்டு. அவை அனைத்தும் கருத்து எனப்படும். நம் சிந்தனையில் உருவாகும் எதுவும் நாமாக வெளிப்படுத்தாத வரையில் மற்றவருக்கு தெரியாது. அவைகள்தான் கருத்து எனப்படும்.

12ம் பக்கத்தொடர்ச்சி......

இந்த இடத்தில் இதுவரை வெளிவராத இன்னொரு முக்கியமான விடயத்தையும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

இலங்கையின் தலைசிறந்த மார்க்ஸிச இலக்கிய - அரசியல் விமர்சகரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவருமான பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள், தனது பணிக்காலத்தில் வழங்கப்படும் சம்பளத்துடனான ஒரு வருட விடுமுறையை, மேற்கு நாடொன்றில் கழித்தார்.

பின்னர் அவர் நாடு திரும்பி யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அந்த நேரத்தில் அவருக்கு இரத்தப் புற்றுநோய் இருப்பது திடீரென்று கண்டுபிக்கப்பட்டது. அவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி சிறிது நாட்களில் மரணித்தார்.

அந்த நேரத்திலும் அவரது நோய் சம்பந்தமாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்களில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அதாவது அவரது உடலில் இரத்தப் புற்றுநோய் உண்டாவதற்கான கிருமிகள் வெளிநாட்டில் வைத்துச் செலுத்தப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்கள் அப்போது நிலவின என்பது குறிப்பிடத்தக்கது. *

முன்பக்கத்தொடர்ச்சி…

'இலங்கையில் நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை என்பதை இந்திய அரசாங்கம் ஏற்க வேண்டும், அதற்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் விசாரித்து தண்டனை வழங்க வேண்டும், இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு தனிநாட்டை உருவாக்குவதற்காக தமிழர்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடாத்தும்படி ஐ.நாவை இந்தியா வலியுறுத்த வேண்டும்' போன்ற கோரிக்கைகளை தமிழக மாணவ போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ளனர். இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும்வரை தமது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளனர். அத்துடன் தமது போராட்டத்தைப் புலிகளின் வழியில் தொடரப் போவதாகவும் எச்சரிக்கை வேறு விடுத்துள்ளனர். அதுமாத்திரமல்ல, ஏறக்குறைய அவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் முதல்வர் ஜெயலலிதாவின் தமிழக அரசாங்கம் சட்ட சபையில் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது.

உண்மையில் மாணவர்களின் இந்த விபரீதமான கோரிக்கைகளும், அவர்கள் புலிகள் வழியில் போராடப் போவதாக விடுத்துள்ள எச்சரிக்கையும், இலங்கை அரசுக்கானது என்பதைவிட, இந்திய அரசுக்கானது என்பதுதான் உண்மையான நிலவரமாகும். இந்திய மத்திய அரசு இலங்கையில் என்ன செய்ய நினைத்ததோ, அதைத் தலைகீழாக தமிழக மாணவர்கள் மாற்றி அமைத்துள்ளனர்.

இந்திய அரசுக்கெதிராகச் செயல்பட்ட, அந்த நாட்டின் தலைவரான ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்த புலிகளை முற்றுமுழுதாக அழித்துவிட வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சி அரசு முனைப்புடன் செயல்பட்டது. இலங்கையுடன் பல்வேறு பிரச்சினைகளில் (இலங்கையின் சீன ஆதரவு நிலை போன்ற) இந்திய அரசுக்கு கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும், புலிகளை வேரோடு அழிக்கும் இலங்கை அரசின் முயற்சியில் இந்தியா தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. புலிகளைக் காப்பாற்ற முன்வந்த மேற்கத்தைய சக்திகளையும் இந்தியா தடுத்து நிறுத்தி, புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு வியூகம் வகுத்துக் கொடுத்தது. அதன் மூலம் புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டனர். அத்துடன் ஒரு பெரும் தலைவலி முடிந்தது என இலங்கை – இந்திய அரசுகள் எண்ணியிருந்தன.

ஆனால் புலிகளின் ஆதரவாளர்களாகவும், பாதுகாவலர்களாகவும் திகழ்ந்த இந்த வெளிநாட்டு சக்திகளால் இதைச் சீரணிக்கவோ, பொறுத்துக் கொள்ளவோ முடியவில்லை. அவர்கள் இறுதி யுத்த காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் என்று சொல்லி இலங்கை அரசுக்கெதிராக அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதுடன், ஜெனிவாவில் செயற்படும் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் ஊடாக கடந்த வருடமும், இவ்வருடமும் இரு கண்டனப் பிரேரணைகளையும் முன்வைத்தன. அதன் மூலம் இலங்கையை மட்டும் அல்லாது, இறுதி யுத்த நேரத்தில் இலங்கைக்கு உதவிய இந்தியாவையும் குற்றஞ்சாட்டுவததான் அவர்களது உண்மையான அந்தரங்கத் திட்டம்.

புலிகளின் அழிவால் கையறு நிலையிலும் விரக்தியிலும் இருந்த புலம்பெயர் புலி அதரவாளர்களையும் தமது நோக்கத்தில் இந்தச் சக்திகள் ஒன்றிணைக்கத் தவறவில்லை.

அதுமட்டுமல்லாமல், இந்தக் குற்றச்சாட்டிலிருந்து இந்திய அரசு தப்பிவிட முடியாதபடி, இந்த வெளிநாட்டு சக்திகள் தமிழ்நாட்டிலுள்ள தமது ஆதரவு சக்திகள் மூலம் இந்திய மத்திய அரசுக்கு நெருக்கடிகளையும் உருவாக்கத் தொடங்கின. அவர்கள் ஒருபக்கத்தில் இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்குத் துரோகமிழைத்ததாகக் குற்றஞ்சாட்டிக் கொண்டு, மறுபக்கத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசலை உண்டுபண்ணின. அதன் மூலம் ஒரேகல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதில் அவை வெற்றி கண்டன.

மறுபக்கத்தில், இத மேற்கத்தைய சக்திகள் இலங்கையில் முடிவுக்கு வந்துவிட்ட புலிகளின் போராட்டத்தை தமிழக மாணவர்களின் வடிவில் உசுப்பிவிட்டுள்ளன. பொதுவாக மாணவர்கள் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். முன் அனுபவமின்றி எதையும் செய்யத் துணிபவர்கள். எனவே அவர்களை ஒருமுறை உசுப்பி விட்டுவிட்டால், பின்னர் விடயங்கள் யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தறிகெட்டுச் செல்ல ஆரம்பிக்கும். இலங்கைத் தமிழர் போராட்டத்திலும் முதலில் மாணவர்களே உசுப்பி விடப்பட்டனர் என்பதை இந்த இடத்தில் நினைவுகூர்வது அவசியம்.

இப்பொழுது தமிழக மாணவர்களின் போராட்டம் தமிழக அரசாலோ, இந்திய மத்திய அரசாலோ கட்டுப்படுத்த முடியாத நிலையை அடைந்துள்ளது. முட்ட வரும் வெறிகொண்ட காளை மாட்டைக் கண்டு மிரண்டோடுபவர்கள் போல, தமிழக மாணவர்களின் போராட்டத்தைக்கண்டு, அனைத்து தமிழகக் கட்சிகளும் ஒடிக் கொண்டிருக்கின்றன. தமிழக காங்கிரஸ் கட்சியும் இதில் அடக்கம்.

இந்தியா தனக்கு எதிராக தமிழ்நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பு நிலையைத் திசை திருப்பவும், அமெரிக்காவுடன் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உறவைப் பாதுகாக்கவும், கடந்த வருடமும் இந்த வருடமும் அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. இருந்தும் அதனால் தமிழகத்தில் மத்திய அரசுக்கு ஆதரவாக எவ்விதமான சாதகமான நிலையும் ஏற்படவில்லை. மாறாக இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புணர்வு முன்னொருபோதும் இல்லாத வகையில் உருவானதுதான் அதன் மிச்சம்.

தமிழக மாணவர்களின் இப்போராட்டம் வெளிப்பார்வைக்கு முற்றுமுழுதாக இலங்கைக்கு எதிரானது எனத் தோன்றினாலும், அது பாதி உண்மைதான். மறுபாதி உண்மை, அது இந்திய அரசுக்கும் எதிரானது என்பதுதான். அதுமாத்திரமல்லாமல் வெகுவிரைவில் அது முற்றுமுழதாக இந்திய அரசுக்கு எதிராக மாறும் என்பதும் இன்னொரு உண்மை. அதற்கான திட்டங்களின் அடிப்படையிலேயே இப்போராட்டம் வெளிநாட்டு சக்திகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆசியாவில் இந்த வெளிநாட்டு சக்திகளின் நீண்ட கால நோக்கம், சீனாவை மீண்டும் தமக்கு அடிமைப்படுத்துவதும், இந்தியாவை இன அடிப்படையில் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்துவதும் ஆகும். இடையில் இலங்கையில் தமது வளர்ப்புப் பிள்ளைகளான புலிகளை இலங்கை அரசாங்கம் அழித்ததினாலும், தமது நலன்களுக்கு எதிராக அந்த நாடு தமது எதிரி நாடுகளான சீனா, ரஸ்யா, ஈரான், வெனிசூலா, வியட்நாம் போன்ற நாடுகளுடன் உறவுகள் வைத்ததினாலும்தான், ஒரு தற்காலிக ஊடலாக இலங்கை அரசுடன் இந்த வெளிநாட்டு சக்திகள் முரண்டு நிற்கின்றன.

இலங்கையில் எதிர்காலத்தில் தற்செயலாக ஏகாதிபத்திய சார்பு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமையுமானால், இந்த வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்கு எதிரான சகல குற்றச்சாட்டுகளையும் உடனடியாக வாபஸ் வாங்கி விடுவார்கள் என்பது நிச்சயம்.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை, அங்கு காங்கிரஸ் அரசு போய், வலதுசாரி பாரதீய ஜனதா ஆட்சி வந்தாலும், இந்தியாவை உடைத்துப் பலவீனப்படுத்துவது என்ற உலக ஆதிக்க சக்திகளின் நோக்கம் மாறப்போவதில்லை. இந்த உண்மையை தற்போதைய இந்திய அரசு உணர்ந்து கொள்வது அவசியமானது. அதாவது இந்தியா - இலங்கை என்ற இரண்டு நாடுகளையும் பொறுத்தவரை, இந்தியாதான் உலக ஆதிக்க சக்திகளின் பிரதான இலக்காகும் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

இந்த அடிப்படை உண்மையை இந்திய அரசு உணர்ந்துகொண்டு, இலங்கை அரசுக்கு எதிரானது என்ற போர்வையில், உண்மையில் இந்திய அரசுக்கு எதிராக வெளிநாட்டு சக்திகளின் பின்னணியில் தமிழக மாணவர்கள் நடாத்தும் போராட்டங்களையும், தமிழக பிரிவினைவாத சக்திகளின் தேசவிரோத நடவடிக்கைகளையும், இந்திய அரசு முறியடித்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுடன், இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியத்தின் அடிப்படையிலும், கூட்டுச்சேரா இயக்கம், சார்க் பிரகடனம் என்பவற்றின் கோட்பாடுகளுக்கு இணங்கவும், இந்தியா தனது அயல் நட்பு நாடான இலங்கையுடன் நெருங்கிய நட்புறவைப் பேணுவது அவசியமானது. *

16ம் பக்கத்தொடர்ச்சி.....

எழுத்தாளர் பிரபஞ்சன் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான 'தாழப் பறந்த பரத்தையர் கொடி' என்ற நூலில் இருந்து பின்வரும் பகுதியை மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

"ஒரு அரவாணி உருவாவது என்பது பற்றிய விஞ்ஞானத் தகவல்கள் பல புதிர்களைக் கட்டவிழ்க்கின்றன. மகாராசன் தொகுத்த 'அரவாணிகள்' என்னும் மற்றும் ஒரு முக்கிய ஆவணமான நூலில் டாக்டர் சாலினி நமக்குப் புதிய பல தகவல்களைச் சொல்கிறார். இந்தப் பூலோகத்தில் பிறக்கும் எல்லா ஜீவராசியும் 'ஜனிக்கும்' அந்தக் கணத்தில் பெண் பாலாய்த்தான் ஜனிக்கிறது. அந்த உயிர்க்கரு பெண்ணாகவே இருக்கிறது. அந்தக் கருவின் உடம்பில் ஒற்றை Y குரோமோசோம் வீற்றிருந்தால், அது கருவான ஆறாம் வாரத்தில் டெஸ்டோஸ்டீரோன் எனும் ஹார்மோனை உற்பத்தி செய்கிறது. அந்த டெஸ்டோஸ்டீரோன் என்ற ஹார்மோன் அந்தக் கருவின் உடம்பு முழுக்கப் பரவி எல்லா செல்களையும் 'ஆண்மைப்படுத்தி' விடுகிறது. ஆறு வாரம் வளர முலைகள், மூளை நரம்புகள், கர்ப்பப்பையாக பிறகு வளரப்போகும் முலேரியன் குழாய்கள் என்று முழுவதுமாகப் பெண்பாலாய் இருந்த அந்த சிசு, டெஸ்டோஸ்டீரோனின் உபயத்தால் மெல்ல மெல்ல மாறுகிறது. அதன் இனப்பெருக்க உறுப்புகள் ஆண்மைப்படுத்தப்படுவதால் விரைப்புறுப்பு, விந்தகம் மாதிரியான புதுப்புது உறுப்புகள் உருவாகின்றன. அதேபோல, சிசுவின் மூளை நரம்புகளும் மாற்றி அமைக்கப்படுவதால் 'ஆண்' என்கிற உடல் உருவம் மூளையில் பதிகிறது. இதனை 'பாடி இமேஜ்' என்கிறோம். நம் எல்லோரின் மூளையிலும் நமது ஒவ்வொரு புற உறுப்பிற்கான உருவகமும் பதிந்திருக்கிறது.

'நான் ஆம்பிளையாக்கும்' என்று மீசை முறுக்கும் சண்டியர்கள் எல்லோருமே முதல் ஆறு வாரங்கள் பெண்ணாக இருந்து, 'பெண்மயம்' கருணையினால் ஆண்களாகப் பிழைத்தவர்கள்தான் என்பதை அறியும் போது மகிழ்ச்சி தோன்றுகிறது. அதோடு, மரபணுக்கள் கர்ப்பப்பைக்குள் செய்த யுத்தமும் மூன்றாம் பால் தோன்றக் காரணமாகிறது என்பது விஞ்ஞானம். இதற்கு அப்பன்மார்களும் அண்ணன்மார்களும் குதிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?"

**- நாயகி**

**மார்க்சிய இயங்கியல் பற்றி ஏங்கல்ஸ்**

*"பிரபஞ்சம் முழுவதும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளன. இந்தப் பிரபஞ்சத் தொடர்பு சம்பந்தப்பட்ட விஞ்ஞானமே இயக்கவியல்... மேலும் மனித சிந்தனை, மனித சிந்தனைக்கு வெளியே உள்ள புற உலகம் ஆகியவற்றின் இயக்கம் பற்றிய பொதுவான விதிகளைக் கொண்ட விஞ்ஞானமே இயக்கவியல்"*

# ‘மூன்றாம் பாலின் முகம்’ என்றொரு அரவாணிகளின் முதல் நாவல்! இலங்கையைச் சேர்ந்தவர் எழுதியிருக்கிறார்!!



பிரியா பாபு

தமிழ் இலக்கியக் களத்தில் ஒரு வரலாற்றுத் திருப்பமாக பிரியா பாபு என்ற அரவாணி ஒருவர் எழுதிய ‘மூன்றாம் பாலின் முகம்’ என்றொரு நாவல் வந்திருக்கிறது. இதன் மூலம் இதுவரை காலமும் ஆண்களும் பெண்களும் மாத்திரம் ஆதிக்கம் செலுத்தி வந்த தமிழ் இலக்கிய உலகின் பரப்பில் புதிய விருட்சம் ஒன்று முளை விட்டுள்ளது. கடல் போன்ற தமிழ் இலக்கியத்தில் இது ஒரு சிறிய அலை என்ற போதிலும், வருங்காலத்தைக் கட்டியம் கூறுவதாக இந்த அலை அமைந்துள்ளது.

நீண்ட காலமாக ‘அலிகள்’, ‘அரவாணிகள்’, என்று அழைக்கப்பட்டு வந்த இந்த சமூகப் பிரிவு, அண்மைக் காலமாகத்தான் சற்று மரியாதையாக ‘திருநங்கைகள்’, ‘மூன்றாவது பாலினம்’ என்ற அடைமொழிகளால் அழைக்கப்பட்டு வருகிறது.

உலக சமுதாயத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இந்த சமூகப் பிரிவினர் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்தும் புறக்கணிப்புக்கும், கேவலப்படுத்தலுக்கும் உள்ளாகியே வந்துள்ளனர். இன்றும் அந்த நிலைமையில் பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை. அவர்களது அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் மட்டுமின்றி வாழ்வுரிமைகளும் முற்றிலுமாக மறுக்கப்பட்டே வந்துள்ளன.

இந்தப் பிரிவினரை சமூகம் மட்டுமின்றி அவர்களது குடும்பத்தவர்களான தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார் உறவினர் என சகலருமே வெறுத்து ஒதுக்குகின்ற நிலைமைதான் நிலவுகின்றது. அதனால் மனமுடைந்த அவர்களில் சிலர் தற்கொலை செய்திருக்கின்றனர். சிலர் வீட்டைவிட்டு ஓடி பிச்சைக்காரர்களாகவும், விபச்சாரகர்களாகவும் மாறியிருக்கின்றனர்.

மிக அண்மைக் காலங்களாக சில தொண்டு நிறுவனங்கள் இவர்களுக்கு காப்பிடங்களை ஏற்படுத்தி, கல்வி வசதி, தொழிற் பயிற்சிகள், வேலை வாய்ப்பு என்பனவற்றை உருவாக்கிக் கொடுத்து முயற்சிகள் எடுத்துள்ள போதிலும், அவை சிறிய அளவிலேயே இருக்கின்றன. இருந்தாலும் அந்த முயற்சிகளின் ஊடாக இவர்களில் சிலர் சமூகத்தில் சில முக்கிய பொறுப்புகளை வகிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர் என்பதையும் மறுக்க முடியாது.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில் ‘மூன்றாம் பாலின் முகம்’ என்ற இந்த முதல் நாவலை எழுதிய பிரியா பாபு இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கையிலுள்ள முசிறி என்ற கிராமமே இவரது பூர்வீக இடமாகும். பின்னர் இவர் இந்தியாவின் தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்.

12ஆம் வகுப்புவரை படித்துள்ள இவர் படிக்கும் காலங்களிலேயே பெரும் துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர். தனது பேட்டியொன்றில், ‘வேலியே பயிரை மேய்ந்த கதையாக’, இரண்டு ஆசிரியர்கள் தன்னைப் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்தியதாகச் சொல்லியிருக்கிறார்.

இவர் 1998இல் அறுவைச் சிகிச்சை மூலம் தன்னைப் பெண்ணாக மாற்றிக் கொண்டார். அரவாணிகளின் உரிமைகளுக்காகப் பல்வேறு போராட்டங்களை நடாத்தி வரும் இவர், அரவாணிகளுக்கான வாக்குரிமை வழக்கில் முக்கிய பங்காற்றியவர். 2007இல் ‘அரவாணிகள் சமூக வரைவியல்’ என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டார். தற்பொழுது கல்லூரி மாணவர்களுக்கும், காவல்துறையினருக்கும் அரவாணிகள் பற்றிய வகுப்புகளை நடாத்தி வருகின்றார். அரவாணிகள் சமூகத்தில் மற்றவர்கள் போல் சம உரிமையுடனும் கௌரவமாகவும் வாழ வேண்டுமென்பதற்காகத் தன்னைப் போன்ற பலருடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இதேநேரத்தில், அரவாணிகளைக் கேவலப்படுத்தும் ஆண் – பெண் பாலார்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் வகையில் புதிய விஞ்ஞானபூர்வமான தகவல்கள் இப்பொழுது வெளிவந்திருக்கின்றன. அவை பற்றி தமிழகத்தின் பிரபல

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...